பக்கங்கள் 19

# காலை முரசு

முழக்கம்: 02 வள்ளுவ ஆண்டு 2055 ஆனி 13 வெள்ளிக்கிழமை 27.06.2025 அதிர்வு 327


## கிணற்றில் தவறி வீழ்ந்து 10 வயது சிறுவன் மரணம்

### அச்சுவேலியில் துயரம்

மீன்பிடிக்க முயன்ற 10 வயது சிறுவன் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

யாழ். அச்சுவேலி – தோப் 03



தேசிய ஒற்றுமை, நல்லிணக்கத்தை மேம்படுத்தல், மனித உரிமைகளைப் பாதுகாத்தல்:

# இலங்கை மேற்கொள்ளும் திட்டங்களுக்கு முழு ஆதரவு

## ஜனாதிபதியிடம் ஐ.நா. ஆணையாளர் உறுதி

இலங்கையில் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் தனது முழு ஆதரவையும் தெரிவித்தார்.

உத்தியோகபூர்வ 03






உள்ளூராட்சி சபைகளை அமைத்து, நிர்வாகங்களை கைப்பற்றும் விடயத்தில் கிளிநொச்சி மாவட்டத்தைத் தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்திலும் இலங்கைத் தமிழரசுக் கட்சி ‘ஹட்ரிக்’ அடித்திருக்கின்றது.

கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட தலைவர் வைத்தியர் சிவமோகன் கட்சியின் ஒழுக்காற்று நடவடிக்கையின் கீழ் இடைநிறுத்தப்பட்டிருக்கிறார். தமிழரசு கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட செயலாளராக இருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தாம் விரும்பியவர்களை பிரதேச சபைத் தவிசாளர், பிரதித் தவிசாளர் பதவிகளுக்கு நிறுத்த முடியாத அதிருப்தியில் கட்சியின் மாவட்ட செயலர் பதவியைத் 02


உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

★ அரசியல் கைதிகளை உடனே விடுதலை செய்யுங்கள்
★ பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்யுங்கள்

# சர்வதேச நியமங்களுக்கு அமைய உள்நாட்டுப் பொறிமுறை வேண்டும்

## இலங்கை அரசிடம் ஐ.நா. ஆணையாளர் வலியுறுத்து

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறலை நிவர்த்தி செய்வதற்கு உள்நாட்டுப் பொறிமுறையை நிறுவ வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க், இலங்கை அரசிடம் வலியுறுத்தியுள்ளார்.

அந்த உள்நாட்டுப் பொறிமுறையானது சர்வதேச விதிமுறைகளுடன் ஒத்துப்போக வேண்டும் என்றும், அத்தகைய பொறிமுறையை நிறுவுவதில் இலங்கை சர்வதேச ஆதரவைப் பெற வேண்டும் என்றும் வோல்கர் டர்க் இடித்துரைத்துள்ளார்.

இலங்கைக்கான தனது பயணத்தை நிறைவு செய்த ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் கொழும்பில் நேற்று செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்றார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் அவர், "உள்நாட்டுப் பொறிமுறை தொடர்



பில் அரச தரப்பினருடன் விவாதித்தேன். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை உடனடியாக விடுதலை செய்யவும் வலியுறுத்தினேன். அத்துடன், பயங்கரவாதத் தடைச் சட்டம், ஒன்லைன் பாதுகாப்புச் சட்டம் என்பவற்றை இரத்துச் செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினேன்.

மேலும், பாதுகாப்பு, பொலிஸ் துறைகளில் சீர்திருத்தங்களின் அவசியத்தையும் குறிப்பிட்டேன்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளை மீண்டும் தொடங்குவது ஒரு நேர்மறையான நடவடிக்கையாக அமையும் அரச தரப்பினரிடம் சுட்டிக்காட்டினேன்." – என்றார்.

---

### இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துறந்துவிட்டார். இந்தப் பின்புலத்தில் அங்குள்ள பிரதேச சபைகளை அமைக்கும் நடவடிக்கையை மேற்பார்வை செய்து ஒழுங்குபடுத்தும் பொறுப்பை முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த கட்சிப் பிரமுகர் பீட்டர் இளஞ்செழியனிடம் தமிழரசுக் கட்சி தலைமை ஒப்படைத்து இருந்தது. அவர் அதனைச் செய்து தமது திறமையை நிரூபிப்பாரா என்று நேற்று இப்பத்தியில் கேள்வி எழுப்பியிருந்தேன்.

நேற்று நடைபெற்ற முல்லைத்தீவு மாவட்டத்தின் மூன்று உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர் தெரிவுகளிலும் தலைமைப் பதவியைக் கைப்பற்றி தமிழரசு கட்சி 'ஹட்ரிக்' அடித்து இருக்கின்றது.

ஏற்கனவே முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குரிய தேர்தலில் தனித்து அறுதிப் பெரும்பான்மை பெற்றமை காரணமாக தமிழரசு கட்சி அந்தப் பிரதேச சபையின் தவிசாளர், பிரதி தவிசாளர் பதவிகளை நேரத்துடன் பெற்றுக் கொண்டு விட்டது.

நேற்று கரைத்துறைப்பற்று, துணுக்காய், மாந்தை கிழக்கு பிரதேச சபைகளுக்கான தவிசாளர், பிரதித் தவிசாளர் தெரிவுகள் நடைபெற்றன.

ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு விதமான தந்திரோபாயங்களையும் அணுகுமுறைகளையும் கையாண்டு, பிற தரப்புகளையும் கைக்குள் போட்டு வெற்றியை உறுதிப்படுத்தி இருக்கிறார் பீட்டர் இளஞ்செழியன். தமிழரசின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா, முன்னாள் வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் கமலேஸ்வரன் ஆகியோரின் பங்களிப்புடன் விடயத்தை ஒப்பேற்றியிருக்கின்றார் அவர்.

கிளிநொச்சி மாவட்டத்தை போல இப்போது அருகில் இருக்கும் முல்லைத்தீவு மாவட்டத்திலும் உள்ள அனைத்துப் பிரதேச சபைகளையும் இலங்கைத் தமிழரசு கட்சி கைப்பற்றி விட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

★ ★ ★

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட யாழ்ப்பாணம் மாநகரசபையின் முதலாவது அமர்வு இந்த வார முற்பகுதியில் நடைபெற்றது. முதல் கூட்டத்திலேயே மாநகர சபை உறுப்பினர்களுக்கு சபை அமர்வு நாள்களில் இலவசமாக மத்தியானம் சோறு விருந்து வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து, அதையொட்டி சபையின் தீர்மானம் ஒன்றையும் போட வைத்திருக்கின்றார் சங்கின் உறுப்பினர் ஒருவர்.

உள்ளூராட்சி சபை உறுப்பினர்களிற்கு தனியாக மாத கொடுப்பனவு இருப்பதனால் அவர்களுக்கு என எந்தவொரு மேலதிக செலவும் சபை நிதியில் இருந்து வழங்க முடியாது எனத் தெரிவிக்கும் மாகாண உள்ளூராட்சி அமைச்சரின் வர்த்தமானி அறிவித்தல் உள்ளது.

இதன் காரணமாக கூட்டம் இடம்பெறும் தினங்களில் மதிய உணவு சபை நிதியில் வழங்க முடியாத நிலை உள்ளது. ஆயினும், இலவசமாக மதிய உணவு வழங்கப்பட வேண்டும் என ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் நேரடியாக வென்று வந்த உறுப்பினர் தர்ஷானந்த் பிரேரணை ஒன்றை முன் வைத்தார்.

இதனையடுத்து இந்த விடயம் தீர்மானமாக நினைவேற்றப்பட்டு தற்போது வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் ஒப்புதலிற்காக அனுப்பி வைக்கப்படுவதாகத் தகவல் தெரிவிக்கின்றது.

புதிய உறுப்பினர்களின் முதலாவது போற்றுதலுக்குரிய மக்கள் சேவை இது....!

★ ★ ★

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்த போது அவர் லண்டனுக்கு மேற்கொண்ட தனிப்பட்ட பயணம் ஒன்றுக்கு அரச நிதி செலவிடப்பட்டமை தொடர்பில் விசாரணைகளை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஆரம்பித்து இருக்கின்றனர் என்று கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி என்ற முறையில் ரணில் விக்கிரமசிங்க கியூபாவுக்கும் அமெரிக்காவுக்கும் 2023 செப்டெம்பரில் விஜயம் செய்த சமயம் இடைநடுவில் இரண்டு நாள்கள் அவர் தனிப்பட்ட பயணமாக லண்டன் சென்றிருந்தார்.

அவரது மனைவி லண்டனில் ஒரு பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டம் பெறும் நிகழ்ச்சியில் பங்கு பற்றுவதற்காகவே அங்கு ரணில் சென்றார் என்று கூறப்படுகிறது. அந்தப் பயணத்திற்காக அரச நிதியில் ஒரு கோடி 69 லட்சம் ரூபா செலவிடப்பட்டிருப்பதாக குற்றப் புலனாய்வுப் பிரிவு கூறுகிறது.

இந்த விசாரணை தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆளணியில் பணியாற்றிய இரண்டு சிரேஷ்ட அதிகாரிகளின் வாக்குமூலங்களைப் பதிவு செய்வதற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவு தீர்மானித்திருக்கிறது. ஆனால் அவர்கள் இருவரும் இப்போது நாட்டுக்கு வெளியில் இருக்கிறார்கள். அவர்களை விசாரணைக்காக நாட்டுக்குத் திரும்ப அழைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு வெளிவிவகார அமைச்சை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கோரியிருக்கின்றனர் என்று தெரிய வருகிறது.



## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணம் மேற்கொண்டு இலங்கை வந்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க், நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்தித்தபோது இந்தக் கருத்தை வெளியிட்டார்.

இலங்கையில் தற்போது இடம்பெற்று வரும் புதிய அரசியல் மற்றும் சமூக மாற்றத்தைப் பாராட்டிய ஆணையாளர், வடக்கு மற்றும் தெற்கில் உள்ள அனைத்து மக்களும் தற்போதைய ஜனாதிபதி மற்றும் அரசின் மீது மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளனர் என்று தெரிவித்தார்.

தனது இலங்கை விஜயத்தின் போது இலங்கையில் நடைபெற்று வரும் புதிய மாற்றம் குறித்து தெளிவான புரிதலைப் பெற முடிந்ததாகத் தெரிவித்த, வோல்கர் டர்க், இன்று நாட்டின் அனைத்து மக்களும் சிறந்த எதிர்காலத்துக்கான புதிய நம்பிக்கைகளைக் கொண்டுள்ளனர் என்று தான் நம்புவதாகவும் கூறினார்.

காணாமல்போனோர் தொடர்பான பிரச்சினை குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது. வடக்கு மற்றும் தெற்கில் காணாமல்போனவர்களின் உறவினர்கள் ளின் வேதனைகள் ஒரேஅமாதிரியானவை என்றும், அவர்கள் அரசின் மீது வைத்திருக்கும் நம்பிக்கைகள் நிறை வேறும் என்றும் ஐக்கிய நாடுகள் சபை யின் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் எதிர்பார்க்கின்றது என்று ஆணைஆய்லர் மேலும் கூறினார்.

தற்போதைய அரசியல் கலாசாரம் காரணமாக மக்களின் எதிர்பார்ப்புகள் மற்றும் அவர்களின் உரிமைகள் குறித்து சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் செயற்படத் தவறியுள்ளதால், காணாமல்போனவர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நிறுவன கட்டமைப்பை வலுப்படுத்தி மறுசீரமைக்க வேண்டியதன் அவசியம் தொடர்பாகவும் இதன்போது ஆராயப்பட்டது.

இங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான பிரச்சினையை அனுபவ ரீதியாக எதிர்கொண்ட ஓர் அரசியல் இயக்கமாக தனக்கு அது தொடர்பான புரிதல் இருப்பதாகத் தெரிவித்தார்.

நாட்டில் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை உறுதி செய்வதற்கும், மனித உரிமைகளைப் பாதுகாக்க தேவையான சீர்திருத்தங்களை செயற்படுத்துவதற்கும் தனது அரசு உறுதிபூண்டுள்ளது என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதே தற்போதைய நிலைமையில் அரசின் பிரதான நோக்கம் என்று கூறிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, சவால்களை நன்கு புரிந்து கொண்டு, அந்த நோக்கத்திற்காக உறுதி பூண்டுள்ளதாகவும், சர்வதேச அளவில் அனைவரின் ஆதரவையும் எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.

இலங்கையின் இந்த உண்மையான நிலைமையை உலகுக்குக் கொண்டு செல்வதன் மூலம் சர்வதேச அளவில் இலங்கையின் நற்பெயரை மேம்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளின் ஆதரவு அவசியம் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கைக்கான ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் ஆண்ட்ரே பிராஞ்ச், மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் ஆசிய – பசிபிக் பிரிவு பிரதானி ரோரி மங்கோவன், மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலக அதிகாரி எலேன் சேன், ஐ.நா அலுவலக சிரேஷ்ட மனித உரிமைகள் ஆலோசகர் லைலா நசராலி, அபிவிருத்தி ஒருங்கிணைப்பு அதிகாரி அஸாம் பாக்கீர் மார்கர் மற்றும் ஊடக மற்றும் தகவல் அதிகாரி அந்தணி ஹெட்லி ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இலங்கை அரசின் சார்பாக நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகே ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கிணற்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புப் பகுதியில் நேற்று மாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த பிரதீபன் தக்ஷன் (வயது 10) என்பவரே உயிரிழந்துள்ளார்.

தனது பாட்டனுடன் மேற்படி சிறுவன் தோட்டத்துக்குச் சென்ற போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாட்டன் தோட்டத்துக்குத் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்தபோது கிணற்றில் இருந்த மீன்களைப் பிடிப்பதற்கு சிறுவன் முயன்றுள்ளார். இதற்காக அவர்



வாளியைக் கிணற்றில் விட்டபோது வாளியின் கயிறு காலில் சிக்கியதில் சிறுவன் கிணற்றுக்குள் வீழ்ந்துள்ளார்.

சிறுவனின் சடலம் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# 21.87 மில்லியன் கிலோகிராம் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது

இந்த ஆண்டு மே மாதத்தில் 21.87 மில்லியன் கிலோகிராம் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டதாக ஃபோர்ப்ஸ் ரூ வாக்கர் டீ புரோக்கர்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது 2.4 மில்லியன் அதிகரிப்பாகும் என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு, மே மாதத்தில் 19.45 மில்லியன் கிலோகிராம் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது.

மேலும், இந்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் 103.38 மில்லியன் கிலோகிரோம் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

# தொழிலுக்காக இஸ்ரேலுக்கு இலங்கையர்களை அனுப்புவது தொடர்பில் விரைவில் தீர்மானம்

தொழில் நிமித்தம் இலங்கை பணியாளர்களை இஸ்ரேலுக்கு அனுப்புவது குறித்து, எதிர்வரும் நாள்களில் தீர்மானம் எட்டப்படுமென வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதியமைச்சர் அருண் ஹேமசந்திரா தெரிவித்துள்ளார்.

நிலவும் சூழ்நிலையின் அடிப்படையில், தொழிலாளர்களின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு, இந்த தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஈரான் மற்றும் இஸ்ரேலில் தற்போதைய நிலைமைகள் குறித்துக் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மேற்படி இரண்டு நாடுகளிலும் உள்ள இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்குத் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஈரானிலிருந்து 2 இலங்கையர்கள், தூதரக உறுப்பினர் ஒருவர் மற்றும் மாணவர் ஒருவரும் ஈரானின் எல்லையைக் கடந்து துருக்கிக்குப் பயணிப்பதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன், மேலும் 2 இலங்கையர்கள் டுபாய்க்கு பயணிப்பதற்கான வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதியமைச்சர் அருண் ஹேமசந்திரா தெரிவித்துள்ளார்.

# அதிகபட்ச சில்லறை விலைக்கு உப்பு விற்பனை செய்ய தீர்மானம்

சந்தையில் உப்பின் விலையை குறைத்து, அதிகபட்ச சில்லறை விலையில் உப்பை விற்பனை செய்ய தீர்மானித்துள்ளதாக இலங்கை உப்பு உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபையுடன் எட்டப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்த தீர்மானம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சமீபத்தில் இறக்குமதி கட்டுப்பாடுகளை அரசாங்கம் தளர்த்தியதால் போதுமான அளவு உப்பு கையிருப்பில் உள்ளது என்றும், இறக்குமதி செய்யப்பட்ட உப்பை உடனடியாக விற்பனை செய்ய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை உப்பு உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி, கல் உப்பு ஒரு கிலோகிராம் 180 ரூபா

தூள் உப்பு ஒரு கிலோகிராம் 240 ரூபா



தூள் உப்பு 400 கிராம் 120 ரூபா என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படவுள்ளது.

மேற்படி விலையில் பொதி செய்யப்பட்ட உப்பை நாடு முழுவதும் விநியோகிக்க பல நாட்கள் எடுக்கலாம் எனவும், அதன் பிறகு நுகர்வோர் நாடு முழுவதும் மேற்படி விலையில் பொதி செய்யப்பட்ட உப்பை வாங்க வாய்ப்பு கிடைக்கும் எனவும் இலங்கை உப்பு உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.



# சிறுவர்களிடையே தொற்றா நோய்கள் அதிகரிப்பு: சுகாதார அமைச்சு கவலை

இலங்கையில், சிறுவர்களிடையே தொற்றா நோய்கள் அதிகரித்துவரும் நிலைமை குறித்து, சுகாதார அமைச்சு கவலை தெரிவித்துள்ளது.

மோசமான உணவுப் பழக்க வழக்கங்கள் மற்றும் வாழ்க்கை முறை தேர்வுகள் இதற்குக் காரணம் என்று, அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

சுகாதார மேம்பாட்டுப் பணியகம் ஏற்பாடு செய்த ஊடக சந்திப்பு ஒன்றில் கருத்துரைத்த அமைச்சின் ஊட்டச்சத்துப் பிரிவின் பணிப்பாளர் மோனிகா விஜேரத்ன, நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தம் போன்ற நிலைமைகள், பாடசாலை வயது சிறுவர்களை அதிகளவில் பாதித்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், 2024 இல் இலங்கையின் தேசிய ஊட்டச்சத்து மாதத்தில் சேகரிக்கப்பட்ட தரவுகளை மேற்கோள் காட்டிய அவர், 1, 4, 7 மற்றும் 10 ஆம் வகுப்புகளில் சுமார் 7 சதவீதமான மாணவர்கள் அதிக எடையுடன் இருக்கின்றனர் என கண்டறியப்பட்டதாக மோனிகா விஜேரத்ன குறிப்பிட்டுள்ளார்.

அதே ஆண்டு, 13 முதல் 17 வயதுடைய சிறுவர்களிடையே நடத்தப்பட்ட உலகளாவிய சுகாதார ஆய்வில், 3 சதவீதமான மாணவர்கள் உடல் பருமனாகவும் 12 சதவீதமானோர் அதிக எடையுடனும் இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இந்தநிலையில், 17 சதவீத சிறுவர்கள் சீனி பானங்களை உட்கொள்கின்றனர்.

28 முதல் 29 சதவீதமான சிறுவர்கள் அதிக கொழுப்புள்ள உணவுகளை உட்கொள்கின்றனர்.

41 சதவீதமான சிறுவர்கள் அதிக சீனி உணவுகளை உட்கொள்கின்றனர்.

28 சதவீதமானோர் உப்பு நிறைந்த சிற்றுண்டிகளை உட்கொள்கின்றனர் என்றும் மோனிகா விஜேரத்ன கூறியுள்ளார்.

இந்த முறைகள் சிறுவர்களின் உணவுப் பழக்கம் சிறந்ததல்ல என்பதைக் காட்டுகின்றன.

எனவே, இதன் விளைவாக, இளம் வயதிலேயே உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு போன்ற தொற்றா நோய்கள் ஏற்படும் அபாயம் அதிகரித்து வருவதாக, சுகாதார அமைச்சின் ஊட்டச்சத்துப் பிரிவின் பணிப்பாளர் மோனிகா விஜேரத்ன தெரிவித்துள்ளார்.




# மரக்கறி வியாபாரிகள் இருவர் கோரா விபத்தில் பரிதாபப் பலி!

வாகன விபத்தில் ஆண்கள் இருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் மாத்தறை, திக்வெலை பிரதேசத்தில் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 3.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வீதியில் பயணித்த ஹயஸ் வான் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. மோட்டார் சைக்கிளில் பயணித்த ஆண்கள் இருவரும் உயிரிழந்துள் ளனர்.

மேற்படி இருவரும் படுகாயங்களுடன் திக்வெலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னரே உயிரிழந்துள்ளனர்.

திக்வெலையைச் சேர்ந்த 33 வயதுடைய நபரும், கம்புறுபிட்டியவைச் சேர்ந்த 49 வயதுடைய நபருமே சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

இருவரும் மரக்கறி வியாபாரிகள் என்று பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

ஹயஸ் வானின் சாரதியைக் கைது செய்துள்ள பொலிஸார், விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அர்ச்சுனாவுக்கு இறுகும் கயிறு!

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தின் சுயேச்சைக் குழு நாடாளுமன்ற உறுப்பினரான வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா அந்தப் பதவியை வகிப்பதற்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ள ரிட் மனு அவரது பதவிக்கு ஆப்பு வைக்கும் விதத்தில் இறுகி வருவதாகவே தோன்றுகின்றது.

வழக்கு விசாரணையின் போக்கும், அதையொட்டி அரசு தரப்பும் மனுதாரர் தரப்பும் முன் வைக்கும் வாதங்களும் வைத்தியர் அர்ச்சுனா இராமநாதனுக்கு எதிரான - காட்டமான - சட்ட விவகாரங்களாக அமைந்திருப்பதை மறுக்க முடியாது.

வைத்தியர் அர்ச்சுனா இராமநாதன் அரச சேவையில் வைத்தியராக பணியாற்றியவர். சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் பதிலீடு மருத்துவக் கண்காணிப்பாளராக பணிபுரிந்த சமயத்தில், ஒழுக்காற்று நடவடிக்கையின் கீழ் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டவர். ஆயினும் ஒழுக்காற்று நடவடிக்கை விசாரணை நிலுவையில் இருக்கின்றமை காரணமாக அவர் இன்னும் அரசு சேவையிலிருந்து விலக்கப்படவோ, விலகவோ, உத்தியோகபூர்வமாக விடுவிக்கப் படவோ முடியாதவராக உள்ளார்.

ஒழுக்காற்று விசாரணை நிலுவையில் இருக்கின்ற காரணத்தால் அவர் விரும்பினால் கூட நினைத்தவுடன் அரச சேவையைத் தூக்கி எறிந்து விட்டு, விலகி வெளியே வர முடியாத இக்கட்டில் அவர் சிக்கி இருக்கிறார்.

இந்தச் சமயத்தில்தான் அவர் நாடாளுமன்றத் தேர்தலில் குதித்து, பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்தி, அவற்றுக்கு மத்தியில் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகியும் விட்டார். நாடாளுமன்ற உறுப்பினரான பின்னரும் சர்ச்சைகளைக் கிளப்புவது தான் தம்முடைய பிரதான பணி என்பது போல கடமையாற்றி வருகிறார்.

இப்போது அவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பதற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த ரிட் மனு விசாரணைக் கட்டத்தை அடைந்து விட்டது.

அரச நிர்வாக தர அதிகாரியாக இருக்கின்ற அரசு ஊழியர் ஒருவர் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவோ தெரிவு செய்யப்படவோ சட்ட ரீதியாக அருகதை அற்றவர். அது சட்டத்திலும் அரசமைப்பிலும் தெளி வாக உள்ளது.

அந்த ஏற்பாடுகளின் கீழேயே இப்போது வைத்தியர் அர்ச்சுனா இராமநாதனின் எம்.பி. பதவி நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றது.

இந்த மனு தொடர்பில் சட்டமா அதிபர் தரப்பு நீதிமன்றத்தில் பிரசன்னமாகி அரசுத் தரப்பு நிலைப்பாட்டை தெளிவாக வெளிப்படுத்தி விட்டது.

மனுதாரர் தரப்பும் அதே கருத்தை சுட்டிக்காட்டி, அது அதன் அடிப்படையில் அர்ச்சுனா இராமநாதன் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்க முடியாது என்பதை ஓரளவுக்கு நீதிமன்றத்தில் வாதமாக முன் வைத்து விட்டது.

இனிமேல் எதிர்மனுதாரரான அர்ச்சுனா இராமநாதனின் சட்டத்தரணிகள் தமது பக்க வாதத்தை வரும் இரண்டாம் திகதிக்கு முன் வைக்கும் போது, அதனைச் செவிமடுத்த பின்னர் தீர்ப்புக்காக வழக்கை நீதிமன்றம் ஒத்தி வைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சட்ட நடவடிக்கைகளின் போக்கை அவதானிக்கும் போது மிக விரைவில் அர்ச்சுனா இராமநாதனின் நாடாளுமன்றப் பதவி தொடர்பான தலைவிதி எழுதப்பட்டு வெளியிடப்பட்டு விடும் என்றே தோன்றுகின்றது.

அரச ஊழியர் என்ற காரணத்துக்காக அவரது எம்.பி. பதவி பறிபோகுமானால் அரச வைத்திய துறையில் அவருக்கு எதிரான ஒழுங்காற்று நடவடிக்கை விசாரணை முடிவடைந்து ஒரு தீர்க்கமான முடிவு எட்டப்படும் வரை அவர் மாகாண சபை தேர்தல் உட்பட எந்த தேர்தலிலும் போட்டியிடக்கூடிய சூழல் இருக்காது என்பதும் கவனிக்கத்தக்கது.



# கொள்கலன் தாங்கி ஊர்திகளின் நெரிசல் விரைவில் முடிவுக்கு கொண்டுவரப்படும்

கொழும்பு துறைமுகத்தில் ஏற்பட்டுள்ள, கொள்கலன் தாங்கி ஊர்தி நெரிசல் எதிர்வரும் நாள்களில் முடிவுக் கொண்டுவரப்படும் என சுங்க ஊடகப் பேச்சாளர், மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகம் சீவலி அருக்கொட தெரிவித்துள்ளார்.

கொழும்பு துறைமுகத்தில் மீண்டும் கொள்கலன் நெரிசல் ஏற்பட்டுள்ளதாக கொள்கலன் தாங்கி ஊர்தி உரிமையாளர்கள் சங்கம் நேற்று தெரிவித்தது.

இந்திலையில், கொழும்பில் நெற்றி நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் சுங்க ஊடகப் பேச்சாளர் சீவலி அருக்கொட இது குறித்து விளக்கமளித்திருந்தார்.

இறக்குமதி செய்யப்பட்ட உப்பு கொள்கலன்களை குறுகிய காலத்திற்குள் விடுவிப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக இந்த நெரிசல் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அதற்கமைய, அடுத்த சில நாள்களில் இந்த நெரிசல் முடிவுக்கு வரும் எனவும் மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகம் சீவலி அருக்கொட தெரிவித்துள்ளார்.

# உள்ளூராட்சி சபைகளுக்கு இன்னமுமே 160 உறுப்பினர்கள் நியமனமாகவில்லை

(ந.லோகதயாளன்)

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றியீட்டிய கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் இதுவரை 160 உறுப்பினர்களை இன்னமும் பெயர் குறித்து நியமிக்கவில்லை எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இலங்கையின் 339 உள்ளூராட்சி சபைகளிற்கும் இடம்பெற்ற தேர்தலில் நேரடியாக தேர்வானவர்களின் பெயர்ப் பட்டியல்களை தேர்தல்கள் ஆணைக் குழுவே வெளிப்படுத்திய நிலையில் பட்டியல் மூலம் தேர்வான உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கான உறுப்பினர்களின் பெயர் விவரங்களை கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கப்படும் பெயர்களைத் தேர்தல்கள் ஆணைக்குழு வர்த்தமானி மூலம் உறுதி செய்யும்.

இந்த நடைமுறைகளின் அடிப்படையில் கட்சிகளிற்கு பட்டியல் மூலம் வழங்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையில் இதுவரை 160 உறுப்பினர்களிற்கான பெயர் விவரங்களை கட்சிகள் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# தற்போதைய வேலணைப் பிரதேச செயலாளர் சிவகரன் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபராக பதவி ஏற்கவுள்ளார்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக அரச அதிபராக தற்போதைய வேலணைப் பிரதேச செயலாளர் சிவகரன் பதவி ஏற்கவுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக அரச அதிபர் நிர்வாகத்திற்கான வெற்றிடம் நீண்ட காலமாக காணப்படுகின்றது. இந்த வெற்றிடத்தை நிரப்பவே தற்போதைய வேலணைப் பிரதேச செயலாளர் நியமிக்கப்படுகின்றார்.

மாவட்டச் செயலகத்தில் இன்று காலை 10.30 மணிக்கு அவர் பதவி ஏற்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நிர்வாக சேவை தரம் 1ஐச் சேர்ந்த மூன்று அதிகாரிகள் விசேட தரத்திற்கு தேர்வாகிச் செல்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.



# தென்னாபிரிக்க குடியரசின் முன்னாள் ஜனாதிபதியை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சந்தித்தார்

ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க மற்றும் தென்னாபிரிக்க குடியரசின் முன்னாள் ஜனாதிபதி தபோ ம்பெக்கி இடையிலான சந்திப்பு நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இலங்கைக்கு இது தனது முதல் விஜயம் என்றும், கடந்த காலங்களில் இலங்கையின் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தில் ஆர்வமாக இருந்ததாகவும் கூறிய முன்னாள் ஜனாதிபதி ம்பெக்கி, இதுபோன்ற சமயத்தில் இலங்கைக்கு வருகை தருவது மகிழ்ச்சியளிக்கும் விடயம் என்று கூறினார்.

தென்னாபிரிக்காவும் இலங்கையும் புவியியல் ரீதியாக தூரம் இருந்தாலும், வெவ்வேறு இனங்கள், மதங்கள் மற்றும் கலாச்சாரங்கள் இருப்பதால் இரு நாடுகளும் ஒற்றுமைகளைக் கொண்டுள்ளன என்று அவர் கூறினார். அமைதி மற்றும் நல்லிணக்கத்தை அடைவதில் இரு நாடுகளும் ஒரே மாதிரியான சவால்களை எதிர்கொள்கின்றன என்றும், பல்வேறு வகையான மக்கள் குழுக்களை ஒன்றிணைப்பதில் இலங்கை ஜனாதிபதியுடன் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள தான் விருப்பத்துடன் இருப்பதாகவும் அவர் கூறினார்.

பல்வேறு வகையான மக்கள் குழுக்களை ஒன்றிணைப்பதன் மூலம் தற்போதைய பொருளாதார சவால்கள் மற்றும் தேசிய நல்லிணக்க சவால்களை இலங்கை ஜனாதிபதி சமாளிக்க முடியும் என்று ம்பெக்கி நம்பிக்கை தெரிவித்தார்.

நாடுகளுக்கு இடையே ஒற்றுமையை மேம்படுத்துவதற்கும், நாடு எதிர்கொள்ளும் பொருளாதார சவால்களை சமாளித்து நாட்டை முன்னோக்கி நகர்த்துவதற்கும் தான் உறுதிபூண்டுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இலங்கைக்கான தென்னாபிரிக்க உயர் ஸ்தானிகர் செண்டில் ஷால்க், தபோ ம்பெக்கி நிதிய பிரதம நிர்வாக அதிகாரி மெக்ஸ்வெல் போக்வானா, தபோ ம்பெக்கி நிதிய பிரதம செயல்பாட்டு அதிகாரி லுக்ஹன்யோ நீர் ஆகியவர்களும் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் ரோஷன் கமகே ஆகியோரும் இந்த சந்திப்பில் பங்கேற்றனர்.











# நயினை அம்மனுக்கு நேற்று கொடியேற்றம்!

## ஜூலை 9 ஆம் திகதி தேர்த் திருவிழா

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத்தின் பெருந்திருவிழா கொடியேற்றத்துடன் நேற்று வியாழக்கிழமை ஆரம்பமானது.

பக்தர்களின் 'அரோகரா' கோஷத்துடன் நண்பகல் 12 மணிக்குக் கொடியேறியது.

முன்னதாக, அம்பாளுக்கு விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வசந்த மண்டபத்தில் விநாயகப் பெருமான், முருகன் – வள்ளி – தெய்வானை ஆகியோருக்குச் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்று அம்பாள் பரிவார தெய்வங்களுடன் கொடித்தம்பம் அருகே வீற்றிருக்க கொடியேற்றம் நடைபெற்றது.

தொடர்ந்து நடைபெறும் பெருந்திருவிழாவில் எதிர்வரும் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு சப்பரதத் திருவிழாவும், மறுநாள் 9ஆம் திகதி புதன்கிழமை தேர்த் திருவிழாவும், அடுத்தநாள் 10ஆம் திகதி வியாழக்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

மறுநாள் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிரசித்தி பெற்ற தெப்போற்சவம் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.



# தொட்டியில் உள்ள தண்ணீரில் இருந்து இளைஞர் ஒருவரின் சடலம் மீட்பு

(எஸ்.ரகுதீஸ்)

தொட்டியில் உள்ள தண்ணீரில் இருந்து இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் இணுவில் மேற்கைச் சேர்ந்த சசிகுமார் திவான்சன் (வயது 20) என்ற இளைஞராவார்.

மேற்படி இளைஞருக்கு வலிப்பு வருவதாகவும் நேற்று முன்தினம் புதன்கிழமை (25) பிற்பகல் தந்தையாரின் மரக்காலைக்கு செல்வதாக கூறிவிட்டு வீட்டிலிருந்து சென்றுள்ளார்.

ஆனால் அவர் தெல்லிப்பளையில் உள்ள அவர்களின் பிறிதொரு வீட்டில் தொட்டியில் உள்ள தண்ணீரில் இருந்து சடலமாக மீட்கப்பட்டு தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். சாட்சிகளை காங்கேசன் துறை பொலிஸார் நெறிப்படுத்தினர்.







# செல்லக் கதிர்காமம் பகுதியில் களைகட்டும் மாணிக்ககங்கை

(வி.ரி.சகாதேவராஜா)

செல்லக் கதிர்காமத்தில் மாணிக்க கங்கை நேற்று முதல் களை கட்டத் தொடங்கியுள்ளது.

ஏராளமான பாதயாத்திரீகர்கள் மற்றும் அடியார்கள் மாணிக்கங்கையில் அநாயாசமாக நீராடி வருகின்றனர்.

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கதிர்காமம் முருகன் ஆலய வருடாந்த கொடியேற்றம் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

அதனையொட்டி அடியார்கள் நிரம்பி வழியதொடங்கியுள்ளனர். தினமும் இரவுநேர திருவிழா பெரஹரா நடைபெறத் தொடங்கியுள்ளது.







# மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் கும்பாபிஷேகம் இன்று முதல் திங்கள் வரை எண்ணெய்க் காப்பு

(வாலகிருஸ்ணா)

இராம பிராணால் வழிபடப்பட்ட ஆலயம் என்ற பெருமையைக் கொண்ட கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 02ஆம் திகதி வெகுவிமர்சையாக நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு இராஜகோபுரம்,மூலஸ்தானம் மற்றும் ஏனைய பரிபாலன ஆலயங்களுக்கான கலசம் வைக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

மூர்த்தி,தலம்,தீர்த்தம் ஆகியனவற்றினை ஒருங்கே கொண்ட – ஆடி அமாவாசையில் பிதிர்க்கடன் தீர்க்கும் தீர்த்தக்கேணியையும் கொண்ட – மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேக கிரியைகள் கடந்த 23ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

நேற்றைய தினம் ஆலயத்தில் விசேட பூஜைகள் நடைபெற்று ஆலயத்தின் இராஜகோபுரம் மற்றும் மூலஸ்தானம் மற்றும் ஏனைய பரிபாலன ஆலயங்களுக்கான கலசம் வைக்கும் நிகழ்வு நடைபெற்றது.

இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் திங்கட்கிழமை வரையில் அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

02ஆம் திகதி புதன்கிழமை மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் வெகுவிமர்சையாக நடைபெறவுள்ளது.











# ஈரான் உடனான போரில் அமெரிக்கா சாதிக்கவில்லை

## அயதுல்லா அலி கமேனி தெரிவிப்பு

இஸ்ரேலை காப்பாற்றும் முயற்சியாக ஈரான் உடனான போரில் ஈடுபட்ட அமெரிக்கா எதையும் சாதிக்கவில்லை என்று ஈரான் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் – ஈரான் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்ட பின் முதல் முறையாக, இந்த போர் தொடர்பாக ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி தனது கருத்துகளை எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“போலியான சியோனிச (இஸ்ரேல்) ஆட்சியை வென்றதற்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். பல்வேறு குழப்பங்களுக்கு மத்தியில், சியோனிச ஆட்சி இஸ்லாமியக் குடியரசின் தாக்குதல்களால் கிட்டத்தட்ட வீழ்த்தப்பட்டு நசுக்கப்பட்டது.

அமெரிக்காவை ஈரான் வென்றதற்கு எனது வாழ்த்துகள். அமெரிக்கா நேரடியாகப் போரில் நுழைந்தது. ஏனெனில் அது அவ்வாறு செய்யவில்லை என்றால், சியோனிச (இஸ்ரேல்) ஆட்சி முற்றிலுமாக அழிக்கப்படும் என்று அந்நாடு உணர்ந்தது. அந்த ஆட்சியைக் காப்பாற்றும் முயற்சியில், அமெரிக்கா போரில் நுழைந்தது. எனினும், எதையும் அமெரிக்கா சாதிக்கவில்லை.



அமெரிக்காவின் முகத்தில் இஸ்லாமிய குடியரசு ஒரு பெரிய அடியைக் கொடுத்தது. பிராந்தியத்தில் உள்ள முக்கிய அமெரிக்க தளங்களில் ஒன்றான அல்–உதெய்த் விமானத் தளத்தைத் தாக்கி ஈரான் சேதப்படுத்தியது. பிராந்தியத்தில் உள்ள முக்கிய அமெரிக்க மையங்களை ஈரானால் அணுக முடியும் என்பதும், அது அவசியம் என்று கருதும் போதெல்லாம் நடவடிக்கை எடுக்க முடியும் என்பதும் ஒரு குறிப்பிடத்தக்க விஷயம். இதுபோன்ற நடவடிக்கை எதிர்காலத்தில் மீண்டும் நிகழலாம். ஏதேனும் தாக்குதல் நடந்தால், எதிரி நிச்சயமாக அதிக விலை கொடுக்க நேரிடும்.” என தெரிவித்துள்ளார்.

# காசா மீது இஸ்ரேல் தாக்குதல்; 21 பேர் பலி, 20 பேர் காயம்



காசா பகுதியில் இஸ்ரேல் நடத்திய துப்பாக்கிச் சூடு மற்றும் வான்வழித் தாக்குதல்களில் 21 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர்.

காசா நகரத்தின் ஷேக் ரத்வான் புறநகரில் இடம்பெயர்ந்த குடும்பங்கள் வசிக்கும் ஒரு பள்ளியின் மீது இஸ்ரேல் நேற்று நடத்திய வான்வழித் தாக்குதலில் 9 பேர் கொல்லப்பட்டனர். அதேபோல கான் யூனிஸின் தெற்கில் உள்ள ஒரு முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 9 பேர் கொல்லப்பட்டனர்.

மத்திய காசாவில் உள்ள ஒரு முக்கிய பாதையில் ஐ.நாவின் நிவாரணப் பொருள்களை வழங்கும் லொறிகளுக்காக மக்கள் காத்திருந்தபோது இஸ்ரேல் இராணுவம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் கொல்லப்பட்டனர், 10 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

எனினும், நேற்று நடந்த தாக்குதல் சம்பவங்கள் குறித்து இஸ்ரேல் இராணுவம் எந்த உறுதிப்படுத்துதலையும் இதுவரை வழங்கவில்லை.

இஸ்ரேல் – ஈரான் இடையில் போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ள நிலையில், காசா மீதான தாக்குதலையும் இஸ்ரேல் நிறுத்த வேண்டும் என பல்வேறு தரப்பிலிருந்தும் குரல்கள் எழுந்துள்ளன. ஆனாலும், ஹமாஸை முற்றிலுமாக ஒழிக்கும் வரை தாக்குதலை நிறுத்தப்போவதில்லை என்று இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு அறிவித்துள்ளார்.

அமெரிக்காவின் ஆதரவுடன் அரபு நாடுகள், எகிப்து மற்றும் கட்டார் ஆகிய நாடுகள் இஸ்ரேல் – ஹமாஸ் இடையே போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைகளை நடத்தும் முயற்சியில் இறங்கியுள்ளன. ஆனால் இந்த புதிய சுற்று பேச்சுவார்த்தைக்கான சரியான நேரம் குறித்து தகவல்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்று ஹமாஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

காசா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் இதுவரை 56,000 இற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மெக்சிகோவில் கொண்டாட்டத்தில் துப்பாக்கிச்சூடு; 12 பேர் உயிரிழப்பு

மெக்சிகோவின் குவாஞ்சுவாடோவில் உள்ள இரபுவாடோ நகரில் நடந்த இரவு நேர கொண்டாட்டத்தின் போது மர்ம நபர் நடத்திய துப்பாக்கிச் சூடு தாக்குதலில் 12 பேர் கொல்லப்பட்டனர்.

இரபுவாடோ நகரில் புனித யோவான் பாப்டிஸ்டைக் கொண்டாடும் விதமாக மக்கள் தெருவில் நடனமாடி மது அருந்திக் கொண்டிருந்தபோது ஒருவர் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் பலர் உயிரிழந்தனர், பெரும்பாலான நபர்கள் அலறியடித்து ஓட்டம் பிடித்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் இருந்து தப்பிக்க அங்கிருந்தவர்கள் கண்ணீருடன் ஓடிய காணொலி காட்சிகள் இணையத்தில் வைரலாக பரவி வருகிறது.

இதுகுறித்து நேற்று முன்தினம் செய்தியாளர்களை சந்தித்த இராபுவாடோ அதிகாரி ரோடால்போ கோம்ஸ் செர்வாண்டஸ்,



இந்த சம்பவத்தில் 12 பேர் உயிரிழந்தனர் எனவும் 20 பேர் காயமடைந்தனர் என்றும் தெரிவித்தார்.

மெக்சிகோ முதல்வர் கிளாடியா ஷீன்பாம் பார்டோ இந்த தாக்குதல் குறித்து வருத்தம் தெரிவித்ததுடன், இது குறித்து விசாரணை நடப்பதாகவும் தெரிவித்துள்ளார்.




# தமிழ்நாட்டில் மதத்துக்கு அல்ல, பா.ஜ.க கூட்டணிக்கு தான் ஆபத்து

## முதல்வர் ஸ்டாலின் தெரிவிப்பு

தமிழ்நாட்டில் மதத்துக்கு ஆபத்து என்று அ.தி.மு.கவை வைத்துக் கொண்டு, பா.ஜ.கவினர் பேசுகிறார்கள். உண்மையில், தமிழ்நாட்டில் பா.ஜ.க. கூட்டணிக்கு தான் ஆபத்து என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திருப்பத்தூர் மாவட்டம் மண்டல வாடியில் நடைபெற்ற அரசு விழாவில், முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, அரசு நலத்திட்ட உதவிகளை பய னாளிகளுக்கு வழங்கினார். இந்த விழாவில் முதல்வர் ஸ்டாலின் உரை யாற்றுகையில்,

"தமிழ்நாட்டு மக்களை மதத்தால், சாதி யால் பிளவுபடுத்த தொடர்ந்து முயற்சி செய்து வருகிறார்கள். அவர்களால் முடியாதபோது, இங்கு இருக்கக்கூடிய அ.தி.மு.கவையும் சேர்த்துக்கொள்கி றார்கள். நாம் கேட்பது, நாட்டில் வளர்ச்சி சரிகிறது, மக்களின் வாழ்வாதாரம் பாதிக் கப்படுகிறது, வேலைவாய்ப்பு இல்லை என்று சொன்னால், பா.ஜ.கவும், அ.தி. மு.கவும் மக்களைப்பற்றி கவலைப்படா மல், மதத்துக்காக கவலைப்படுகிறார்கள். இதுதான் அவர்களுடைய அரசியல்.

தமிழ்நாட்டில் மதத்துக்கு ஆபத்து என்று அ.தி.மு.கவை வைத்துக் கொண்டு, பா.ஜ.கவினர் பேசுகிறார்கள். உண்மையில், தமிழ்நாட்டில் பா.ஜ.க. கூட்டணிக்கு தான் ஆபத்து. "மிஸ் கோல்" கொடுத்தும் கட்சியை வளர்க்க முடியாமல் போனவர்கள், தங்களின் அரசியல் லாபத்துக்கு கடவுள் பெயரை 'மிஸ்–யூஸ்' செய்து கொண்டிருக்கி றார்கள். இவர்களின் போலி பக்தியை, அரசியல் நாடகத்தை இங்கு யாரும் ஏற்க மாட்டார்கள். இது தமிழ்நாடு, தந்தை பெரியார் உருவாக்கிய மண், அண்ணா வளர்த்த மண், கருணாநிதி இதை மீட்ட மண், தமிழ்நாடு அனைத்து மதத்தின ரும் தங்கள் உரிமையோடும் பிற மதத்தி னரோடு நல்லிணக்கத்தோடும் வாழு கின்ற மண் இது." – என்றார்.

# போதைப் பொருள் விவகாரம்; நடிகர் கிருஷ்ணா கைதானார்

போதைப் பொருள் பயன்படுத்திய வழக்கில் நடிகர் ஸ்ரீகாந்த் கைது செய்யப்பட்ட நிலையில், நடிகர் கிருஷ்ணாவை நுங்கம்பாக்கம் பொலிஸார் நேற்று கைது செய்தனர்.

'கழுகு' உள்ளிட்ட படங்கள் மூலம் கவனம் ஈர்த்த நடிகர் கிருஷ்ணாவும் போதைப் பொருளை பயன்படுத்தினார் என குற்றச்சாட்டு எழுந்தது. இதையடுத்து, அவரை விசாரணைக்கு ஆஜராகும்படி நுங்கம்பாக்கம் பொலிஸார் அழைப்பாணை அனுப்பினர். ஆனால், அவர் தலைமறைவானார்.

இதையடுத்து, 5 தனிப்படைகள் அமைக்கப்பட்டு விசாரணை நடந்தது.

இந்நிலையில், நேற்று முன்தினம் மாலை நடிகர் கிருஷ்ணா தனது வழக்கறிஞர்களுடன் நுங்கம்பாக்கம் பொலிஸ் உதவி ஆணையர் முன்னிலையில் விசாரணைக்கு ஆஜரானார். அவரிடம் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தினர்.

அப்போது, தான் எந்த வகையான போதைப் பொருள்களை யும் பயன்படுத்தியது இல்லை என உறுதியாக தெரிவித்ததார் என கூறப்படுகிறது. இதனிடையே, கிருஷ்ணாவின் வீட்டிலும் பொலிஸார் சோதனை மேற்கொண்டனர்.

இதையடுத்து, நடிகர் கிருஷ்ணாவுக்கு அரசு மருத்துவ மனையில் மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டது. நடிகர்



கிருஷ்ணாவிடம் 16 மணி நேரத்துக்கும் மேலாக விசாரணை நடத்திய நுங்கம்பாக்கம் பொலிஸார் அவரை கைது செய்–துள்ளனர்.



# மடு அன்னையின் ஆடி மாத திருவிழா ஏற்பாடுகள் திருத்தலத்தில் நேற்று விசேட கலந்துரையாடல்!

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மடு அன்னையின் ஆடி மாத திருவிழா தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று வியாழன் மதியம் மடுத்திருத் தல கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் ஏற்பாட்டில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு பேரருட்திரு கலாநிதி அந்தோனிப்பிள்ளை ஞானப்பிர காசம் ஆண்டகை தலைமையில் இக்கந்து ரையாடல் இடம்பெற்றது.

இதன் போது மடு திருத்தல பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார், மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நேசன் அடிக ளார் அகியோர் கலந்துகொண்டனர்.

இதன் போது திருவிழாவை ஒட்டிய சுகாதாரம்,போக்குவரத்து. குடிதண்ணீர், மின்சாரம், பாதுகாப்புத் தொடர்பாக உரிய தரப்புடன் கலந்துரையாடப்பட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை கடந்த 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் மடு அன்னையின் ஆடி மாத திருவிழா ஆரம்பமானது. தொடர்ந்து நவநாள் திருப்பலி தமிழ், சிங்கள மொழிகளில் ஒப்புக் கொடுக்கப் பட்டது வருகிறது.

எதிர்வரும் 2ஆம் திகதி காலை 6.15 மணிக்கு மறைமாவட்ட ஆயர்கள் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத்திருப் பலியாக ஒப்புக் கொடுக்க உள்ளனர்.

இதில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பல இலட்சக்கணக்கான மக்கள் மடு அன்னையின் ஆசி பெற வருகை தர உள்ளமையினால் சகல விதமான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப் பட்டுள்ளன என மன்னார் மறைமாவட்ட ஆயர் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த கலந்துரையாடலில் பிரதேச செயலாளர்கள். திணைக்களத் தலைவர்கள், பொலிஸ், கடற்படை மற் றும் இராணுவ உயர் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப் பிடத்தக்கது.



























# கடற்றொழில் ஒருங்கிணைப்புக் குழுவின் முல்லைத்தீவு மாவட்ட முதலாவது கூட்டம்

(பா.சதீசன்)

முல்லைத்தீவு மாவட்டத்திற்கான முதலாவது கடற்றொழில் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் பிரதி அமைச்சர் ரத்ன கமகே தலைமையிலும் நாடாளுமன்ற உறுப்பினர் திலகநாதன் மற்றும் ரவிகரன் ஆகியோரின் பங்குபற்றுதலுடனும் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணியளவில் மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரனின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை இனங்கண்டு அவற்றுக்கு விரைவான தீர்வுகளை வழங்குவதே இக்கூட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

முல்லைத்தீவு மாவட்டக் கடற்பரப்பில் சட்டவிரோதமான முறையில் பல படகுகள் மின் விளக்கினை பயன்படுத்தி மீன்பிடியில்ஈடுபடுவதனால்பலஆயிரம்கிலோவில் மீன்களைப் பிடிக்கின்றார்கள். இதனால் சாதாரன மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தின் மாவட்ட பணிப்பாளர் ஆகியோர் பிரதி அமைச்சரிடம் தெரிவித்தனர். இதற்கு விசேட செயலணியை உருவாக்கி நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், அமைச்சின் மேலதிக செயலாளர், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி), கடற்றொழில் அமைச்சின் உயர் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், கடலோரப் பாதுகாப்பு திணைக்களம், பொலிஸார், கடற்றொழில் அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

















# வவுனியாவில் மத்தியஸ்த சபையின் உறுப்பினர்களுக்கு நியமன கடிதம்

(கி.வசந்தன்)

வவுனியா மத்தியஸ்த சபைக்கு புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள தவிசாளர், உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

வவுனியா மற்றும் மன்னார் மாவட்ட மத்தியஸ்தர் சபையின் பயிற்றுவிப்பாளர் செல்லத்துரை விமலல்ராஜ் தலைமையில் இன்றைய தினம் நேற்று வவுனியா பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இந் நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா பிரதேச செயலாளர் இ.பிரதாபன் கலந்து கொண்டு புதிதாக தெரிவு செய்யப்பட்ட மத்தியஸ்தர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கி வைத்தார்.

புதிய தவிசாளராக திருமதி நந்தகுமார் சசிகலா நியமிக்கப்பட்டார்.

இதன்போது வவுனியா பிரதேச செயலாளர் இ.பிரதாபன் கருத்து தெரிவிக்கையில் –

வவுனியா பிரதேச செயலக மத்தியஸ்த சபைக்கு அதிகமான பிணக்குகள் கிடைக்கப் பெற்றுள்ளன. சரியான ஆலோசனை மற்றும் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டே இந்த மத்தியஸ்த சபை நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

காணி தொடர்பான பிணக்குகளே அதிகமாகக் காணப்படுகின்றன. காணி தொடர்பானஆவணங்கள்சரியாககாணப்படாமையால் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் அதிகளவான பிணக்குகள் தற்போது இங்கு உள்ளன.

நீதிமன்றம் செல்ல முன்னர் மத்தியஸ்த சபை செயற்பாட்டை மக்கள் நாடுவதால் நடுநிலைமை மாறாத தன்மையைப் பேண வேண்டும். அவர்களுக்கான நியாயமானதும் நீதியானதுமான, அவர்கள் நலன் சார்ந்த விடயங்களைக் கவனத்தில் கொண்டு இணக்கம் வழங்க வேண்டிய பொறுப்பு மத்தியஸ்த சபைக்கு உரியது. பொருளாதாரத்தில் வலுவிழந்தவர்கள் விடயங்களில் அவர்கள் தன்மையை விடுத்து விவகாரத்தை சரியான முறையில் அணுக வேண்டும்.

மத்தியஸ்த சபை நியமனங்களை பெற்றுக் கொண்ட உத்தியோகத்தர்களுக்கு எனது வாழ்த்துக்கள். – என்று தெரிவித்தார்.

இந் நிகழ்வில் மத்தியஸ்த சபை தவிசாளர் மற்றும் உப தவிசாளர் உட்பட 16 பேருக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் கடந்த மத்தியஸ்த சபை உறுப்பினர்கள், புதிதாக நியமனம் பெற்ற தவிசாளர், உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள், மத்தியஸ்த சபை மாவட்ட பயிற்சி உத்தியோகத்தர் மற்றும் மாவட்ட செயலக பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.










# இ.போ.ச. வவுனியா - முல்லைத்தீவு சேவை குறைபாடுகளைக் களைவதற்கு நடவடிக்கை

(கி.வசந்தன்)

வவுனியா புதிய பஸ் நிலையத்திலிருந்து முல்லைத்தீவு நோக்கிச் செல்லும் இ.போ.சபையின் வவுனியா சாலைக்கு சொந்தமான பஸ் தினசரி காலை 6.30 மணிக்கு புறப்படுகின்றது. எனினும் இந்தச் சேவையில் தமக்கு பல்வேறு குறைபாடுகள் நிலவுவதாக பொதுமக்கள் முன்வைத்த கோரிக்கையினையடுத்து வவுனியா மாநகர துணை முதல்வர் பரமேஸ்வரன் கார்த்தீபனால் உடனடியாகத் தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த சேவையில் அரச மற்றும் தனியார்துறை ஊழியர்கள் உட்பட பலர் பயணிகின்றனனர். பஸ்ஸின் அளவு சிறியதாக உள்ளதாகவும், அளவுக்கு அதிகமான பயணிகள் பஸ்ஸில் ஏறுகின்றமையால் மூச்சுத் திணறல்கள், சீண்டல்கள், சுகாதார சீர்கேடுகள் நிலவுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவும் காணப்படுகின்றன.

அரச, தனியார் நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் இதற்கு உரிய தீர்வினை பெற்றுத் தருமாறு வவுனியா மாநகர சபை துணை முதல்வரிடம் கோரிக்கை முன்வைத்தனர்.

இந்நிலையில் நேற்று இ.போ.சபை வவுனியா சாலைக்கு சென்ற மாநகர சபை துணை முதல்வர் சாலை முகாமையாளருடன் கலந்துரையாடலை முன்னெடுத்தார். கோரிக்கைகள் அடங்கிய கடிதம் ஒன்றையும் சாலை முகாமையாளரிடம் கையளித்திருந்தார்.

இதனையடுத்து எதிர்வரும் திங்கட்கிழமை முதல் மக்கள் சிரமமின்றி பயணிக்கக்கூடிய வகையில் பெரிய பஸ்ஸை அந்தச் சேவையில் ஈடுபடுத்துவதற்கு சாலை முகாமையாளர் உறுதியளித்தார். தமது சாலையின் குறைபாடுகள் மற்றும் தமக்கு இழைக்கப்படும் அநீதிகள் தொடர்பிலும் தமது விளக்கத்தை சாலை முகாமையாளர் வெளிப்படுத்தினார். அவற்றிற்குரிய தீர்வினையும் தன்னால் இயன்றவகையில் பெற்றுத் தருவார் என மாநகர துணை முதல்வர் வாக்குறுதியளித்தார்.



# ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் மன்னார் மாவட்ட பொறுப்பாளர் விஜயராஜ் பதவி விலகல்

(மன்னார் நிருபர்)

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் அங்கத்துவக் கட்சிகளில் ஒன்றான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எவ்வின்) மன்னார் மாவட்டப் பொறுப்பாளர் அருளானந்தம் விஜயராஜ் தான் கட்சியின் மாவட்ட பொறுப்பாளர் பதவியில் இருந்து ராஜினாமா செய்கின்றார் என அறிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து கட்சியின் தலைமைக்கு எழுத்து மூலம் ராஜினாமாக் கடிதத்தைத் தாம் அனுப்பி வைத்துள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியத்தைப் புறக்கணித்து, தமிழ் தேசியத்தை கொன்று புதைத்த கட்சிகளுடன் இணைந்து ஒரு போதும் செயல்பட மாட்டேன் என அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் காலங்களில் தமிழ்ப் பேசும் மக்கள், எமது இளைஞர்கள், யுவதிகளுக்கு நாங்கள் சரியான பாதையைக் காட்ட வேண்டும். தமிழ்த் தேசியம் எனக் கூறிப் போலி அரசியல் செய்து கொண்டு போக்கிரித்தனமான செயல்பாட்டை முன்னெடுத்து வருகின்றனர்.

இக்கட்சிகளுக்கு மத்தியில் நாங்கள் எவ்வாறு தமிழ் இனத்தின் போராட்டம் அல்லது மக்களின் பலத்தை வைத்துக் கொண்டு ஏன் அவர்கள் இவ்வாறு செயல்படுகிறார்கள் என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. மன்னார் மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைகள் அமைக்கப்பட்ட பின்னர் எங்களைக் கேலியாகப் பார்க்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இனி வரும் காலங்களில் நாங்கள் மக்களுக்கு சரியான சேவையை செய்ய வேண்டும். அந்த வகையில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எவ்.) மன்னார் மாவட்டப் பொறுப்பாளர் பதவியில் இருந்து நான் விலகிக் கொள்வதோடு, எதிர்வரும் காலங்களில் தன்னிச்சையாக சுயாதீன குழுக்களுடன் எனது மக்களுக்கு சரியான?சேவையை வழங்வேன்.- என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் -27.06.2025




இன்று நீங்கள் அமைதியுடன் ரிலாக்ஸ்டாக இருக்க வேண்டிய நாள். உணர்ச்சி வசப்படுவதன் மூலம் உங்கள் பிரியமானவர்களிடம் சரியான முறையில் தகவலை பரிமாறத் தவறுவீர்கள்.

உத்தியோக சூழ்நிலை இன்று உங்களுக்கு சாதகமாக இல்லை. உங்கள் கீழ் பணிபுரிவோருடன் மோதல்கள் ஏற்படலாம். கவனமாக இருக்க வேண்டியது அவசியம்.

இன்று நீங்கள் உங்கள் துணையாருடன் கடுமையாக நடந்து கொள்வீர்கள். இது உறவை பாதிக்கும்.

இன்று அதிகமான செலவினங்கள் ஏற்படும். உங்கள் பணத்தை நன்கு நிர்வகிக்க வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். கடின உழைப்பு காரணமாக தலைவலி ஏற்படலாம்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமானதாக இல்லை. உங்கள் முயற்சியில் தாமதங்களை எதிர்கொள்வீர்கள். வெற்றி பெறுவதற்கு நல்ல திட்டமிடல் தேவை. தன்னம்பிக்கை குறைந்து காணப்படும்.

பணியிடத்தில் வேலை அதிகமாக இருக்கும். தவறுகள் நேராமல் இருப்பதற்கு கவனமாக வேலை செய்ய வேண்டும்.

இன்று சரியான புரிந்துணர்வு இல்லாத காரணத்தால் நீங்கள் உங்கள் துணையிடம் உணர்வுகளை சரியான முறையில் வெளிப்படுத்த தவறுவீர்கள்.

இன்று பண இழப்புகள் காணப்படுகின்றன. உங்கள் அலட்சிய மனப்பான்மை பண இழப்பிற்கு வழிவகுக்கும்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்பிருப்பதால் கண் பரிசோதனை செய்து கொள்ள வேண்டியிருக்கும்.




பொறுமையின்மை மற்றும் உறுதியின்மை காரணமாக நீங்கள் முன்னேற இயலாது. இதனால் பதட்டமான சூழ்நிலை காணப்படும். இந்தச் சூழ்நிலையை சமாளிக்க உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்துங்கள்.

உத்தியோக சூழ்நிலை இன்று உங்களுக்கு சாதகமாக இல்லை. சக பணியாளர்களிடம் கவனமாகப் பழகவும். அவர்களால் பிரச்சினைகள் நேரலாம்.

குடும்ப பிரச்சினைகள் காரணமாக சில தொல்லைகள் ஏற்படும். உணர்ச்சிவசப்படுவதை தவிர்த்து விடுங்கள். உங்கள் துணையாருடன் வெளிப்படையாகப் பேசுங்கள். அதனால் பிரச்சினைகளை சுமுகமாக தீர்க்க இயலும் மற்றும் துணையிடம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த இயலும்.

செலவுகள் மலை போல் குவியும். இன்று நிதிநிலைமையை சமாளிப்பது மிகவும் கடினமாக இருக்கும்.

அஜீரணக் கோளாறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. சரியான நேரத்தில் உணவு மேற்கொள்வது நல்லது.




இன்று நீங்கள் இலட்சியத்தை அடையும் ஆற்றலுடன் திகழ்வீர்கள். உங்கள் உறுதியும் தைரியமும் நல்ல விளைவுகளை உருவாக்கும். திறமையான தகவல் பரிமாற்றத்தின் மூலம் நீங்கள் மிகுந்த பலனடைவீர்கள்.

பணியில் உங்கள் திறமைகளை காட்டுவீர்கள். ஆர்வத்துடன் பணியாற்றுவீர்கள். உங்கள் செயலுக்காக பாராட்டைப் பெறுவீர்கள்.

இன்று உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். சிறந்த மற்றும் ஆழமான புரிந்துணர்வை ஏற்படுத்த அது உதவும்.

இன்று நிதிநிலைமை மிகவும் பிரகாசமாக இருக்கிறது. இன்றைய தினம் பயனுள்ள முதலீட்டுக்கான முடிவுகளை எடுக்க சாதகமானதாக உள்ளது.

உங்களை நீங்கள் மகிழ்ச்சியுடனும் ரிலாக்ஸாகவும் வைத்திருப்பதன் மூலம் நல்ல ஆரோக்கியத்தை பேண முடியும்.




இன்று நீங்கள் வெறுமையையும் பாதுகாப்பற்ற தன்மையையும் உணர்வீர்கள். எந்தவொரு விஷயத்தையும் சீரியஸாக எடுத்துக் கொள்ளாமல் இலேசாக எடுத்துக் கொள்ளுங்கள். சமநிலையோடு அணுகாவிட்டால் விஷயங்கள் உங்கள் கைமீறிப் போய்விடும்.

வேலையில்பிரகாசிப்பதற்கானவாய்ப்புகள்காணப்படுகின்றது. உங்கள் திறமைகளுக்கு நல்ல பலன் கிடைக்கும். உங்கள் செயல்திறன் உங்கள் தரத்தையும் திறமையையும் வெளிக்காட்டும்.

இன்று அன்யோன்யமும் அன்பும் அதிகமாக காணப்படும். நீங்கள் உங்கள் துணையிடம் அன்பான உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் கடின உழைப்பினால் நீங்கள் இன்று கணிசமாக பணம் சம்பாதிக்க முடியும். நிதிநிலைமை இன்று நல்ல முறையில் இருக்கும்.

இன்று மிகுந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். ஆரோக்கியம் நல்ல முறையில் இருக்கும்.




உங்கள் முக்கியமான விஷயங்களைக்கூட இன்றுசரியானநேரத்தில்முடிப்பதில் தாமதம் ஏற்படும். திரைப்படம் பார்ப்பதன் மூலம் அல்லது பாடல்களைக் கேட்பதன் மூலம் நீங்கள் நன்றாக உணர்வீர்கள். முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கு இன்றைய நாள் ஏற்புடையதல்ல.

வேலைச் சுமை அதிகமாக இருக்கும். திட்டமிட்டு ஒழுங்கமைப்பதன் மூலம் உங்கள் வேலையை நன்றாகச் செயல்படுத்த முடியும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான மற்றும் திருப்திகரமான நல்லுறவைப் பேண நீங்கள் உணர்ச்சி வசப்படுவதை தவிர்க்க வேண்டும்.

இன்று பணவரவு குறைந்து காணப்படும். எனினும் பரம்பரை சொத்துக்கள் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

இன்று ஆரோக்கியம் நல்ல முறையில் இருக்காது. தொண்டை சம்பந்தமான தொற்று நோயால் பாதிக்கப்படலாம்.




இன்றைய நாள் உங்களுக்கு முக்கியமான இலட்சியங்களை அடைவதற்கு நல்ல வாய்ப்புடன் கூடிய பிரகாசமான நாள். உங்கள் எதிர்பார்ப்பைக் காட்டிலும் நல்ல பலன்கள் கிட்டும். முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள்.

அதிகமான வேலைப்பளு உங்களை ஆக்கிரமித்து உங்களை பிஸியாக வைத்திருக்கும். அதிகப்படியான வேலை காரணமாக பணியில் தவறுகள் நேரலாம்.

சமநிலை நோக்கும் நகைச்சுவை அனுகுமுறையும் உங்கள் துணையை நீங்கள் நன்கு புரிந்து கொள்ள உதவும். உங்கள் துணையுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்ள மன அமைதியுடன் பேசுங்கள்.

இன்றைய அதிகப்படி பணவரவால் உங்களின் சேமிப்பு உயரும். திருப்திகரமாகவும் இருக்கும்.உங்கள் சேமிப்பை உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகளும் காணப்படும்.

தொண்டை எரிச்சலுக்கான சாத்தியம் உள்ளது. குளுமையான பதார்த்தங்களை தவிரக்க வேண்டும்.




இன்று உங்களுக்கு மிகவும் சாதகமான நாள். நீங்கள் எதிர்பாராத வெற்றிகள் உங்களுக்கு ஆழ்ந்த திருப்தியை உண்டாக்கும். இன்று ஆற்றல் நிறைந்து காணப்படுவீர்கள். விருந்தாளிகளின் வருகை மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் கொடுக்கும்.

குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே நீங்கள் உங்கள் பணிகளை திறம்பட முடிப்பீர்கள். உங்கள் வேலை சம்பந்தமாக நிறைய வாய்ப்புகள் கிடைக்கும். நீங்கள் உறுதியான அணுகுமுறையுடன் பணிபுரிவீர்கள்.

உங்கள் துணையுடன் ஒன்றிணைந்து மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் துணையுடன் ரிலாக்ஸ்டாக இருப்பீர்கள். இன்றைய நாள் உங்களுக்கு வசீகரமானதாக அமையும்.

இன்று நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். பணத்தை உங்களால் சேமிக்க இயலும்.

இன்று ஆரோக்கியத்துக்கு உகந்த நாள். உங்கள் மகிழ்ச்சியான மனநிலை நல்ல ஆரோக்கியத்தை பெற்றுத் தரும்.

# இன்றைய ராசி பலன்கள் -27.06.2025




இன்று உங்கள் செயல்களில் கவனம் தேவை. முடிவெடுப்பதற்கு முன் ஒன்றுக்கு இரண்டு முறை யோசிக்க வேண்டும். உங்கள் அன்புக்குரியவர்களுடன் வாக்கு வாதம் ஏற்பட வாய்ப்புள்ளது.

பணியிடத்தில் உங்களுக்கு உற்சாக மான வாய்ப்புகள் கிடைக்கும். அலுவலகச் சூழல் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். நீங்கள் மகிழ்ச்சியுடன் பணியாற்றுவீர்கள்.

உங்கள் இனிமையான மற்றும் ஊக்கமான வார்த்தைகள் உங்கள் துணையை திருப்தியடையச் செய்யும். இனிமையான தருணங்களை உங்கள் துணையுடன் பகிர்ந்து கொள்வீர்கள்.

பணவரவு குறைந்து காணப்படும். இழப்பு ஏற்டா வண்ணம் பணத்தை பத்திரமாக பாதுகாக்க வேண்டும் மற்றும் சேமிக்க வேண்டும்.

இன்று ஆரோக்கியத்திற்கு உகந்த நாள். உங்கள் உறுதியான மனநிலை தேக ஆரோக்கியத்தை நன்கு பராமரிக்க உதவும்




இன்று நற்பலன்கள் கிடைக்கும் நாள். மன உறுதி மூலம் இன்று நீங்கள் உங்கள் முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். உங்கள் முயற்சிகள் மற்றும் உறுதி நேர்மறையான விளைவுகளுக்கு வழிவகுக்கும்.

பணியில் சிறந்த வளர்ச்சி காணப்படும். புதிய வாய்ப்புகள் கிடைக்கும். அந்த வாய்ப்புகள் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

சோர்வான மனநிலை காரணமாக உங்கள் துணையை தவறாக புரிந்து கொள்வீர்கள். அமைதி மற்றும் எளிதான அணுகுமுறை மூலம் நீங்கள் நல்ல புரிந்துணர்வை வளர்க்க முடியும்.

பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். கிடைக்கும் அதிகப்படி பணத்தை உங்களால் சேமிக்க முடியும்.

இன்று முதுகு வலியால் அவதிப்படுவீர்கள். தூக்கமின்மையால் பாதிக்கப்படுவீர்கள். உடற்பயிற்சி அல்லது தியானப் பயிற்சி மேற்கொள்வது நல்லது.




இன்று நீங்கள் வெற்றி பெறுவதற்கு உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்த வேண்டும். உங்கள் முயற்சிகளில்இன்று நீங்கள் பின் தங்கி இருப்பீர்கள். சிறந்த யுக்திகளின் மூலம் உங்கள் இலட்சியங்களை நிறைவேற்ற வேண்டும்.

பணியிடத்தில் மேலதிகாரியுடன் சண்டைகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. உங்கள் மனதை அமைதியாக வைத்திருங்கள். மேலதிகாரியை அனுசரித்து நடந்துகொள்ளுங்கள். எதிர்மறை எண்ணங்களை களைந்து விடுங்கள். எதையும் இலேசாக எடுத்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் சந்தேக உணர்வுக்கு ஆட்பட்டு அதை உங்கள் துணையிடமும் வெளிப்படுத்துவீர்கள். கண்டிப்பாக அதை நீங்கள் தவிர்க்க வேண்டும். சந்தேகத்தால் நல்லுறவு பாதிக்கப்படும்.

இன்று தேவையற்ற செலவினங்கள் காணப்படும். அதிகரிக்கும் செலவினங்கள் கவலையைத் தரும்.

இன்று சீரான ஆரோக்கியம் காணப்படாது. மன அழுத்தங்கள் உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும். மன அழுத்தத்தை கட்டுப்படுத்த வேண்டும்.




இன்று உங்களிடம் காணப்படும் தாழ்வு மனப்பான்மை காரணமாக சிறிது அவநம்பிக்கையோடு காணப்படுவீர்கள். அதனால் இன்று சற்று பின்தங்கியிருப்பீர்கள்.

உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது இதனால் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாவீர்கள். உங்கள் சக பணியாளர்கள் குறித்த நேரத்தில் பணிகளை முடிப்பார்கள். இதனால் உங்களுக்கு கவலை ஏற்படும்.

உங்களின் இனிமையான பேச்சால் உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். இது நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த உதவும்.

அதிகரிக்கும் செலவினங்கள் காணப்படும். அதனால் சேமிப்பு குறைந்து காணப்படும்.

இன்று மிகுந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். ஆரோக்கியம் நல்ல முறையில் இருக்கும்.

# துணுக்காய்ப் பிரதேச சபையின் நிர்வாகமும் தமிழரசுக் கட்சியிடம்




முல்லைத்தீவு – துணுக்காய் பிரதேச சபையின் தவிசாளராக தமிழரசுக் கட்சி உறுப்பினர் கனகரத்தினம் செந்தூரன் தெரிவாகியுள்ளார்.

துணுக்காய் பிரதேச சபைக்கான தவிசார், உபதவிசாளர் தெரிவு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தலைமையில் பிரதேச சபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

13 உறுப்பினர்களைக் கொண்ட இச்சபையில் தவிசாளர் தெரிவிற்காக தமிழரசுக்கட்சி சார்பில் கனகரத்தினம் செந்தூரன், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் சார்பில் சிவகுமார் சிந்து ஜன்ஆகியோரின்பெயர்கள்முன்மொழிக் கப்பட்ட நிலையில் பகிரங்க வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

இதன்போது தேசிய மக்கள் சக்தி சார்பில் வெற்றி பெற்ற உறுப்பினர் ஒருவரும், சுயேச்சைக் குழுவின் ஊசி சின்னத்தில் போட்டியிட்ட உறுப்பினர் ஒருவரும் நடுநிலைமை வகிக்க ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் ஒரு உறுப்பினரதும், சுயேச்சைக்குழு கங்காரு சின்னத்தில் வெற்றி பெற்ற ஒரு உறுப்பினரினதும் ஆதரவுடன் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட கனகரத்தினம் செந்தூரன் 06 வாக்குகளை பெற்ற நிலையில் சி. சிந்துஜன் 05 வாக்குகளை பெற்றார்.

இந்த நிலையில் தமிழரசுக் கட்சி உறுப்பினர் கனகரத்தினம் செந்தூரன் தவிசாளராக தெரிவு செய்யப்பட்டார்.